00145

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்

சட்டக்கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - 2023/2024

மட்டம் - 06

**LLU6715– தொழில் சட்டம்**

**இறுதிப் பரீட்சை**

காலம் : மூன்று (03) மணித்தியாலம்

திகதி : 14.05.2025 நேரம்: பி.ப 01.30 - பி.ப 04.30

---

மொத்த வினாக்களின் எண்ணிக்கை – 08

**ஐந்து (05) வினாக்களிற்கு மாத்திரம் விடையளிக்குக.**

தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. "தொழில் விவகாரங்கள் தொடர்பான எஜமான்களுக்கும் வேலையாட்களிற்குமான பொதுச்சட்டம் பாவனையற்று சென்றுள்ளமை பொதுவானதாகும். தொழில் தொடர்பான நிபந்தனைகள் மீதான பிணக்குகள் சேவை தொடர்பான ஒப்பந்தத்தின் நேரடியான அல்லது உட்கிடையான வாசகங்களுக்கு இணங்க நீதிமன்றங்களால் வழமையாக தீர்க்கப்படுவதில்லை... இதனால் தொழில் விவகாரங்களின் துறைக்குள் சட்டமானது புதிய பார்வையை செலுத்தவேண்டியுள்ளது."

   Load Devlin in United Engineering workers Union v. Devanayagam (1967) 69 NLR 289

   மேலுள்ள கூற்றுடன் நீர் இணங்குகிறீரா?

   பாரம்பரிய அரச கட்டுப்பாடற்ற வணிகத்திலிருந்து நவீன நலன்புரி அரசின் ஏற்பாடுகள் வரை தொழில் ஒப்பந்தத்தின் பரிமாணத்தை எடுத்துக்காட்டி உமது விடைக்கான காரணங்களை வழங்குக.

   (20 புள்ளிகள்)

2. (அ) சரத் என்பவன் எஸ்.ஐ.டி சூஸ் (பிரைவெட்) லிமிடட் (SID shoes (Pvt) Ltd) இன் நுகேகொட கிளையில் முகாமையாளர் ஒருவராக பணி புரிகிறான். அவன் 2020ஆம் ஆண்டின் ஜனவரியில் ஒரு வருட ஒப்பந்தத்தின் கீழ் சேவைக்கு அமர்த்தப்பட்டான். அவனது ஒப்பந்தத்தை பல தடவைகள் கம்பனியானது புதுப்பித்ததால் சரத் தான் ஓய்வடையும் வரை தன் பதவியை தொடரலாம் என எதிர்பார்ப்பைக் கொண்டிருந்தான். எவ்வாறாயினும் எஸ்.ஐ.டி சூஸ் (பிரைவெட்) லிமிடட் ஆனது அவனது நடைமுறையில் உள்ள ஒப்பந்த காலம் முடிவடைந்த பின்னர் அவனது சேவைகளை இடைநிறுத்துவதற்கு தீர்மானித்தது.

   சரத்திற்கு அறிவுறுத்துக.

   (10 புள்ளிகள்)

   (ஆ) நுவரெலியாவில் உள்ள கிறாண்ட் கில் எனும் ஹோட்டலில் முகாமைத்துவமானது சுற்றுலா காலத்தின் உச்சப்பகுதியில் சுரேஸ் என்பவனை ஒரு சுற்றுலா வழிகாட்டியாக நியமித்தது அதிக சுற்றுலா பயணிகளின் வருகையினால் சுரேஸ் தொடர்ச்சியாக இரு மாதங்கள் பணியாற்றினான்.

எவ்வாறாயினும் சுற்றுலாக்காலத்தின் இறுதியில் ஹோட்டல் ஆனது சுற்றுலா பயணிகளின் வருகைக் காலமும் முடிவுறுவதால் அவனது சேவைகள் முடிவுறுத்தப்படும் என்று தெரிவித்தது.

சுரேஸிற்கு அறிவுறுத்துக.

(10 புள்ளிகள்)

3. 'சட்டவாக்கமானது அதன் அறிவுடன் விடயத்தை நியாயசபை அதன் தற்றுணிவை தக்கமுறையில் செயற்படுத்தும் என்ற நம்பிக்கையில் அதன் கைகளுக்கு அளிக்கிறது. எனது கருத்திற்கிணங்க நியாயசபையானது ஒரு நியாயமானதும் ஒப்புறவானதுமான கட்டளையை மேற்கொள்ள அதற்கு அளிக்கப்பட்டுள்ள நெகிழ்வுத்தன்மையானது விரும்பத்தக்கதும் அவசியமானதும் ஆகும்.'

Wijethunga J in UP Country Distributors (Pvt) Ltd v. Subasinghe (1996) 2 SLR 2330 at 335

43ஆம் இலக்க 1950ஆம் ஆண்டின் (திருத்தப்பட்டவாறு) இலங்கையின் தொழிற்துறை பிணக்குகள் சட்டம் என்பதன் கீழ் நிறுவப்பட்டுள்ள தொழில் நியாயசபைகளின் செயற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள் என்பனவற்றை எடுத்துக்காட்டி மேலுள்ள கூற்றை பகுப்பாய்வு செய்க.

(20 புள்ளிகள்)

4. (அ) பிறைட் சைன் அப்பெரல் (பிரைவெட்) லிமிடட் (Bright Shine Apparel (Pvt) Ltd) ஆனது நாட்டில் உள்ள நடைமுறை பொருளாதார சரிவு காரணமாக 50 வேலையாட்களை தொழிலிருந்து ஆட்குறைப்பு செய்வதாக அறிவித்தது. சந்தன எனும் அவ்வாறு பாதிக்கப்பட்ட வேலையாட்களுள் ஒருவர் எந்தவித முன் அறிவித்தலும் கொடுக்கப்படாது தொழிலில் இருந்து நீக்கப்பட்டார். அவன் தனது தொழில் நீக்கத்திற்கு எதிராக அவனுக்கு கிடைக்கத்தகு ஏதேனும் நியதிச்சட்ட பாதுகாப்புகள் குறித்தும், அவன் நாடக்கூடிய கிடைக்கத்தகு நிவாரணங்கள் குறித்தும் சட்ட அறிவுரையை நாடுகிறான்.

சந்தனவிற்கு அறிவுறுத்துக.

(10 புள்ளிகள்)

(ஆ) 45ஆம் இலக்க 1971ஆம் ஆண்டின் (திருத்தப்பட்டவாறு) இலங்கையின் வேலையாட்களின் தொழில் நீக்கம் (சிறப்பு உறுப்புரைகள்) சட்டத்தின் கீழ் தொழில் ஆணையாளரின் பங்கை நுணுக்கமாக ஆராய்க. தொழில் நீக்கத்தின் போது வேலையாட்களின் உரிமைகளை பாதுகாப்பதில் ஆணையாளரின் இடையீடு எவ்வாறு பங்களிக்கிறது?

(10 புள்ளிகள்)

5. பியுட்டி சீக்கிரட்ஸ் பிரைவெட் லிமிட்டட் (Beauty Secrets (Pvt) Ltd) என்பது நாட்டில் உள்ள பிரபல்யமான ஒரு அழகு சாதன உற்பத்தியாளர் ஆகும். இது 350 வேலையாட்களை பணிக்கு அமர்த்தியுள்ளது. இவ்வேலையாட்களுள் 75 சதவீதமானோர் "யுனைட்டட் வெர்க்கர்ஸ் யுனியன்" ("United workers Union") (UWU) எனும் தொழில் சங்கத்தின் உறுப்பினர்களாக உள்ளனர். UWU இன் உறுப்பினரான சதுரிகா என்பவள் எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் தான் வேட்பாளராக களம் இறங்குவதாக அறிவித்தாள். UWU இன் உறுப்பினர்கள் அவளது தேர்தல் பிரசாரத்திற்கு பொருளாதார உதவியை வழங்குவதற்கு ஒருமித்து தீர்மானித்தனர். எவ்வாறாயினும் பியுட்டி சீக்கிரட் பிரைவெட் லிமிட்டடின் முகாமைத்துவமானது இத்தீர்மானத்தை கடுமையாக எதிர்த்ததுடன் தொழில்

சங்கத்தின் மூலமாக தொழில் சங்க உறுப்பினர்கள் அரசியல் நடவடிக்கைகளை ஈடுபடுவதை தவிர்க்குமாறு வலியுறுத்தியது. எவ்வாறாயினும் UWU இன் உறுப்பினர்கள் சதுரிகாவிற்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பை வழங்கினர். இதற்கு பதிலாக கம்பனியானது அரசியல் பிரச்சாரத்தில் களமிறங்கி செயற்பட்ட சதுரிகா உள்ளடங்கிய ஐந்து வேலையாட்களை இடைநிறுத்தியது. இப்பணி இடைநிறுத்தம் தொடர்பில் தொழில் சங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு முகாமைத்துவம் மறுத்ததால் UWU இன் சகல உறுப்பினர்களும் வேலைநிறுத்தம் ஒன்றை மேற்கொள்வதாக தீர்மானித்தனர். வேலை நிறுத்தத்தின் போது முகாமைத்துவத்தின் தீர்மானத்திற்கு எதிரான தமது அதிருப்தியை காட்டும் வண்ணம் அவர்கள் மறியலில் ஈடுபட்டனர். மறியலின் போது சில ஆர்ப்பாட்டக்காரர்கள் பாதுகாப்பு முறைமை, ஒரு கம்பனி வாகனம் மற்றும் இரு உற்பத்திக்கருவிகள் உள்ளிட்ட கம்பனியின் உடமைகளுக்கு சேதத்தை ஏற்படுத்தினர். இதனால் சேதத்திற்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக சட்ட வழக்கு ஒன்றை மேற்கொள்வதற்கான தனது எண்ணத்தை கம்பனி அறிவித்தது.

மேலுள்ள சந்தர்ப்பத்தின் சட்டவிடயங்களை இனங்கண்டு தொடர்புடைய திறத்தவர்களுக்கு பொருத்தமான நியதிச்சட்ட உறுப்புரைகள் மற்றும் தீர்ப்புகள் தொடர்பில் அறிவுறுத்துக.

(20 புள்ளிகள்)

6. இலங்கையின் சிறுவர் தொழிலை ஆளும் சட்ட ஏற்பாட்டின் செயற்திறனை நுணுக்கமாக ஆராய்க. இது எந்தளவு தூரம் சர்வதேச தொழில் சட்ட தராதரங்களுடன் இணங்குகின்றன என்றும் சிறுவர் வேலையாட்களின் பாதுகாப்பினை பலப்படுத்துவதற்கான தேவையான சட்டப்பரிந்துரைகள் எவை?

(20 புள்ளிகள்)

7. சமன் என்பவன் இலங்கை முழுதும் முக்கியமான இடங்களில் உணவகங்களை திறப்பதற்கு திட்டமிடுகிறான். அவன் அவனுடைய வியாபாரத்திற்கு புதிய வேலையாட்களை பணிக்கமர்த்த முனைவதால் தொழில் தொடர்பில் ஆளும் தொழில் சட்டங்களை அறிந்து கொள்ள விரும்புகிறான். குறிப்பாக வேலை காலம் தொடர்பான ஒழுங்குவிதிகள், விடுமுறைகள், ஊதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் முதலான சமூக பாதுகாப்பு உரித்துக்கள் தொடர்பிலும் சட்ட அறிவுரையை நாடுகிறான்.

இலங்கையின் தொழில் தொடர்பான இவ்விடயங்களை ஆளும் பொருத்தமான சட்டவாக்கங்கள் தொடர்பில் சமனிற்கு அறிவுறுத்துக.

(20 புள்ளிகள்)

8. பின்வரும் ஏதேனும் **இரண்டு (02)** தொடர்பில் சட்ட விடயங்களை விளக்குக.

அ. கூட்டு உடன்படிக்கைகள்

ஆ. தகுதிகாண் வேலை

இ. தொழில் நீதிமன்றங்கள்

ஈ. அடிப்படை ILO சமவாயங்கள்

(10x2=20 புள்ளிகள்)

- முழுப்பதிப்புரிமை பெற்றது -